அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.307

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7
15 ஒக்டோபர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசக் கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்ட
சபைகளின் தலைவர்களுக்கும்.

**வறியோர் நிவாரண குழுக்களின் அங்கத்தவர்களுக்குக் கடமை லீவு**

இதுவரை உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த உணவு முத்திரைகள் 01-டிசம்பர் 1985 ஆம் திகதி தொடக்கம் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

02. 1985-இன் 32-ஆம் இலக்க வறியோர் நிவாரண செய்சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் உணவு முத்திரைகளின் தேவையானது ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் நிறுவப்பட்டுள்ளதும், வறியோர் நிவாரணக் குழு என்னும் பெயரில் விளங்குவதுமான குழுவின் மூலம் மதிப்பிடப்படும்.

03. கிராம சேவா நிலதாரி, விசேட சேவைகள் உத்தியோகத்தர், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் எல்போர் இந்தக் குழுவின் உறுப்பினராயிருக்கும் அதே வேளையில் பிரதேச கிராமோதய மண்டலயவின் தலைவர் அல்லது மண்டலத்து உறுப்பினர் மத்தியிலிருந்து அவர் பெயர் குறித்து நியமிக்கும் ஒரு பிரதிநிதியும் பிரஸ்தாபப் பிரிவின் உதவி அரசாங்க அதிபர் பெயர் குறிக்கும் ஒருவரும் கிராமோதய மண்டலயவின் உறுப்பினர்களாக இருத்தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் வறியோ நிவாரணக் குழுக்களை அமைக்க முடியாத பிரதேசங்களில் பொருத்தமான முறையில் குழுக்களை நிறுவுவதற்கு ஒழுங்கு விதிகளின் மூலம் அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

04. கிராமோதய மண்டலமொன்றின் தலைவர் அல்லது அத்தகைய தலைவர் ஒருவரினால் அல்லது அரசாங்க அதிபரொருவரினால் அல்லது உதவி அரசாங்க அதிபரொருவரினால் வறியோர் நிவாரணக் குழு ஒன்றினுக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் ஓர் அரசாங்க உத்தியோகத்தருக்கு அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றினதோ, நியதிச்சட்ட சபையொன்றினதோ ஊழியருக்கு இத்தகைய குழுவொன்றின் கூட்டங்களில் பங்கு பற்றுவதற்கு கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.